



## உயர்கல்வித் துறை

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
# 2025 - 26 ஆம் கல்வியாண்டு

# முதலாமாண்டு மாணவர்களுக்கான
# ஒரு வார கால அறிமுகப் பயிற்சி திட்டம்

**துவக்க நாள் : 30.06.2025**

**இடம் : எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலைக் கல்லூரி,**
**திருப்பூர்.**

# DAY -1

## எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக்கல்லூரி
## திருப்பூர் - 641 604

### முதலாம் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா

நாள் : 30.06.2025 நேரம் : காலை 11.30 மணி

தமிழ்த்தாய் வாழ்த்து

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | முனைவர் க.கீதா அவர்கள்<br>ஆங்கிலத் துறைத்தலைவர் |
| தலைமையுரை | : | முனைவர் மா.தமிழ்மலர் அவர்கள்<br>முதல்வர் (மு.கூ.பொ)<br>எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக்கல்லூரி<br>திருப்பூர். |
| சிறப்புரை | : | திரு. ரே.சுரேஷ் அவர்கள்<br>மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்<br>திருப்பூர் மாவட்டம். |
| கல்விசார் அறிமுகவுரை | : | முனைவர் லிட்டி கொரியா அவர்கள்<br>விலங்கியல் துறைத்தலைவர்<br><br>முனைவர் பா.நளினி அவர்கள்<br>வேதியியல் துறைத்தலைவர் |
| நன்றியுரை | : | திரு. து.இராமலிங்கம் அவர்கள்<br>வரலாற்றுத் துறைத்தலைவர்<br>எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக்கல்லூரி<br>திருப்பூர். |

நாட்டுப்பண்

எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி திருப்பூர் – 641604

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுகப் பயிற்சி திட்டத்தின் முதல் நாள் நிகழ்வுகள்

அறிக்கை

திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 2025 – 26 ஆம் கல்வியாண்டில் சேர்ந்த இளங்கலை மற்றும் இளம் அறிவியல் மாணவியரை வரவேற்கும் துவக்க விழாவில் தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின்(TANSCHE) வழிகாட்டுதலின்படி முதலாம் ஆண்டு மாணவியருக்கான ஒரு வார கால அறிமுக பயிற்சி திட்டத்திற்கு உண்டான முதல் நாள் நிகழ்வு (30.06. 2025) இன்று காலை 11 .30 அளவில் சிறப்பாகத் துவங்கப் பெற்றது.விழா நிகழ்வு தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதாகத் தொடங்கியது. இந்த நிகழ்வில் ஆங்கிலத் துறைத்தலைவர் முனைவர் க. கீதா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரியின் முதல்வர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் மா. தமிழ்மலர் அம்மா அவர்கள் தலைமையுரை நல்கினார். திருப்பூர் மாவட்டம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ரே.சுரேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவியர்களுக்குத் தேவையான விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார் .அவரைத் தொடர்ந்து விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் லிட்டி கொரியா மற்றும் வேதியியல் துறைத் தலைவர் முனைவர் பா.நளினி அவர்கள் கல்விசார் அறிமுகவுரை நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து மிக அற்புதமான கலை நிகழ்ச்சிகளை அனைத்து துறை மாணவிகளும் ஒன்றிணைந்து முதலாம் ஆண்டு மாணவிகளை வரவேற்கும் விதத்தில் பாடல் மற்றும் நடன கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர்கள். வரவேற்பினை ஏற்றுக் கொண்ட முதலாம் ஆண்டு மாணவிகள் சூழலை இலகுவாக்கும் தருணத்தில்( Ice breaking session ) இளம் அறிவியல் விலங்கியல் துறையைச் சார்ந்த முதலாம் ஆண்டு மாணவி ஜெனிபர் மிக அற்புதமான நடனத்தாலும் கிருத்திகா தனது தனித்துவமான குரல் ஆற்றலாலும் அனைத்து மாணவிகளுக்கும் முன்மாதிரியான கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தி செவிக்கும் கண்களுக்கும் விருந்தளித்தனர். விழாவின் நிறைவாக வரலாற்றுத் துறைத் தலைவர் திரு.து.ராமலிங்கம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து புதிய மாணவர்களின் வரவேற்பு விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.நன்றியுரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து புதிய மாணவர்களின் வரவேற்பு விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒருவாரகால அறிமுகப்பயிற்சி திட்டம்

## *DAY-1*





இணைப்பேராசிரியர் மற்றும் ஆங்கிலதுறைத்தலைவர்
முனைவர் க. கீதாஅவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.




சிறப்பு விருந்தினர்க்கு சிறப்பு செய்யப்பட்டது




கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ)
முனைவர் மா.தமிழ்மலர்அவர்கள் தலைமையுரை நல்கினார்.






திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்,
ரே.சுரேஷ்அவர்கள்சிறப்புரைஆற்றினார்

*Topic: Motivational Speech on Job opportunities in various Government sectors with required qualifications.*




இணைப்பேராசிரியர் மற்றும் விலங்கியல் துறைத்தலைவர்

முனைவர் . லிட்டி கொரியா அவர்கள் கல்விசார் அறிமுகவுரை வழங்கினார்.




இணைப்பேராசிரியர் மற்றும் வேதியியல் துறைத்தலைவர்.
முனைவர் பா.நளினி அவர்கள் கல்விசார் அறிமுகவுரை வழங்கினார்.





முதலாமாண்டு மாணவியர்களை இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவியர்கள் கண்கவர் நடனம் மற்றும் குழுபாடல்கள் மூலம் வரவேற்றனர்






*Ice breaking* நிகழ்வின் போது முதலாமாண்டு விலங்கியல்துறை மாணவிகளான ஜெனிபர் மற்றும் கிருத்திகா நடனம் மற்றும் பாடல் பாடி மாணவிகளை மகிழ்வித்தனர்.



உதவி பேராசிரியர் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர்

திரு.து.இராமலிங்கம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்

# DAY-2

## எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி
## திருப்பூர்- 641 604

### அறிமுக பயிற்சி

நாள்: 01/07/2025 நேரம்: 10.00 மணி

தமிழ்த்தாய் வாழ்த்து

| | |
|---|---|
| வரவேற்புரை | : முனைவர் . ஜெ. ஜெயசித்ரா<br>இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,<br>இயற்பியல் துறை |
| தலைமையுரை | : முனைவர். மா. தமிழ்மலர்<br>முதல்வர் (மு.கூ.பொ)<br>எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி, திருப்பூர் |
| சிறப்புரை | : செல்வி கௌசியா A.S<br>நிறுவனர், நாம் கன்சல்டிங் சர்வீசஸ், கோவை |
| கல்வி சார்ந்த அலுவலக அணுகுமுறை | : திரு. தி. சண்முகம்,<br>நிதியாளர் |
| நான் முதல்வன் அறிமுக உரை | : முனைவர். அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ்<br>உதவிப்பேராசிரியர், இயற்பியல் துறை |
| பாடத் திட்டம் மற்றும் பல்கலைக்கழக தேர்வு முறைகள் குறித்த விளக்கம் | : முனைவர் மெ. வித்யா<br>உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை |
| நன்றியுரை | : முனைவர் நா. மீனாட்சி சுந்தரம்<br>உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,<br>இயற்பியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் |

நாட்டுப்பண்

***எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி-திருப்பூர்- 641 604***
***அறிமுக பயிற்சி - இரண்டாம் நாள் அறிக்கை***

***இயற்பியல், இயற்பியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை மற்றும் வணிகவியல் துறை***

***நாள்: 01.07.2025*** ***நேரம்: காலை 10:00 மணி***

*முனைவர். ஜெ. ஜெயசித்ரா இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், இயற்பியல் துறை அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.*

***சிறப்புரை:*** *செல்வி கௌசியா A.S, நிறுவனர் நாம் கன்சல்டிங் சர்வீசஸ், கோவை*

*வாழ்க்கை கல்வியின் நோக்கம் குறித்து அறிமுகம் செய்து சிறப்பு விருந்தினர் சிறப்புரையாற்ற துவங்கினார். கல்வி என்பது முதல் மதிப்பெண் பெறுவதில் மட்டுமில்லை என்ற எதார்த்தத்தை வினாக்கள் மூலம் மாணவர்களிடையே கலந்துரையாடி எடுத்துரைத்தார். அடிப்படை கல்வி (Foundation skills) என்பதே வாழ்க்கையின் அடித்தளம். இதனையே வழிவழியான நமது கல்வி முறைகள் கற்பிக்கின்றன என்ற எண்ணத்தை மாணவிகளின் மனதில் பதிய வைத்தார். மனப்பாடம் செய்வது கல்வி நோக்கமில்லை புரிதல் மட்டுமே கல்வியின் நோக்கம் என்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கல்வியின் தர மாற்றங்கள் குறித்து விளக்கி ஒவ்வொரு துறை சார்ந்த கல்விக்கும் Digital Literacy என்பது அடிப்படையானது என்று உணர்த்தினார். Financial Literacy என்பதன் அவசியம், அதன் பயன்பாடு, விருப்பமுடைய வாழ்க்கையினை வாழ்வதற்கு நாம் கற்ற கல்வியினை சரியான முறையில் கையாளுதல், நேரம் பொன் போன்றது, Communication Skill, பிறரிடம் பழகும் திறன் கற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை குறித்து விளக்கினார்.*

***கல்வி சார்ந்த அலுவலக அணுகு முறை:*** *திரு. தி. சண்முகம், நிதியாளர்*

*2025 -2026 ஆம் கல்வியாண்டில் புதிதாக சேர்ந்த மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை பெறுவதற்கான வழிமுறைகள், கல்லூரியில் படிப்பதற்கான சான்றிதழ் பெறுவது, புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் உதவி தொகை பெறுவது, பல்கலைக்கழக தேர்வு கட்டணம் செலுத்துவது, பேருந்து பயண அட்டை பெறுவது குறித்தும் மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் கல்லூரியின் நிதியாளர் எடுத்துரைத்தார்.*










***நான் முதல்வன் அறிமுக உரை:*** *முனைவர். அ. கிங்சன் சாலமன் ஜீவராஜ், உதவிப்பேராசிரியர், இயற்பியல் துறை*

*நான் முதல்வன் என்பது தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட ஒரு முன்னணி திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வித் திறன்களை மேம்படுத்துவது ஆகும். இது தொழில்துறை சார்ந்த திறன்கள், மென் திறன்கள் (Soft Skills), வாழ்கை வழிகாட்டுதல் மற்றும் உலகளாவிய வாய்ப்புகள் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியது. மாணவர்கள் Data Science, AI, Machine Learning போன்ற தொழில்நுட்பங்களில் பயிற்சி பெற்று, சான்றிதழ்கள் பெற முடியும். இவை அனைத்து மாணவர்களுக்கும், குறிப்பாக பொருளாதார பின்னணியில் பின்தங்கியவர்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் விலைகுறைப்புடன் வழங்கப்படுகின்றன.*

மேலும் மாணவர்கள் தங்கள் கல்லூரியிலேயே பயிற்சிகள் பெறலாம் *placement drives*, தொழில் வளர்ச்சி, பணிமனை பயிற்சிகள், ஆன்லைன் கற்றல் வசதிகள் மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களின் வேலைவாய்ப்பு, ஆகியவற்றை பெறலாம். ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் இத்திட்டத்தில் இடம்பெறுகின்றன. இதில் பங்கேற்கும் மாணவர்கள் *TNPSC, UPSC* போன்ற போட்டித் தேர்வுகளுக்கும் தயார் செய்யப்படுகின்றனர். எனவே இந்தத் திட்டம் ஒரு மாணவனின் கல்வியியல் தொழில்முறை மற்றும் திறன் வளர்ச்சிக்கு முழுமையான தளமாக அமைகிறது.




**பாடத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக தேர்வு முறைகள்குறித்த விளக்கம்:** முனைவர் மெ. வித்யா, உதவிப் பேராசிரியர் வணிகவியல் துறை

ஒரு கல்வியாண்டில் மாணவியர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் தலைப்புகள் மற்றும் உள்ளடக்கங்களை பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. தேர்வுகள் இருவகையாக நடத்தப்படுகிறது அதாவது அகத் தேர்வு முறைகள் மற்றும் புறத் தேர்வு முறைகள் குறித்தும் மாணவியரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மதிப்பீடு குறித்தும் மாணவியரின் வருகையின் முக்கியத்துவம் பற்றியும் பல்கலைக்கழக தர வரிசை பட்டியலில் இடம் பெற தேவையான முறைகளை பற்றியும் தேர்வில் வெற்றி பெற தேவையான மதிப்பெண்கள் குறித்தும் மற்றும் சிறப்பாக தேர்வு எழுதும் முறைகள் குறித்தும் விளக்கமாக கூறப்பட்டது.

முனைவர் நா. மீனாட்சி சுந்தரம் இயற்பியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர் நன்றியுரையாற்றினார்.

# DAY-3



எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி திருப்பூர்- 641 604
முதலாமாண்டு மாணவிகளுக்கான
அறிமுக பயிற்சி
02/07/2025
நேரம்: 10.00 மணி

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை
முனைவர். அ.பா. ஸ்ரீதேவி
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
மின்னணுவியல் துறை.

தலைமையுரை
முனைவர். மா. தமிழ்மலர் முதல்வர் (மு.கூ.பொ)
எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருப்பூர்

சிறப்புரை
பெண்கள் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் பற்றிய உரை
DR. S. இலக்கியா
தேசிய குழந்தைகள் நல திட்டக்குழு மருத்துவ அலுவலர்.
திருப்பூர் மாநகராட்சி.

நல வாழ்வு சுகாதாரம் குறித்த உரை
DR. R. பூரணி ஆஷா.
சுண்டமேடு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர்.

நன்றியுரை
முனைவர் கோ. சுபா
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்.
உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் துறை.

நாட்டுப்பண்

**எல்.ஆர்.ஜிஅரசுமகளிர்கலைக்கல்லூரி - திருப்பூர்**

**முதலாமாண்டுமாணவர்களுக்கான அறிமுக பயிற்சி – மூன்றாம் நாள் அறிக்கை**

**பொருளியல்துறை, மின்னணுவியல்துறை மற்றும் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்தியல் துறை**

*முதல் நிகழ்வாக தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே துவங்கியது.*

***வரவேற்புரை:***

***முனைவர். அ.பா. ஸ்ரீதேவி இணைப்பேராசிரியர் மற்றும் மின்னணுவியல் துறைத்தலைவர் .*** *வரவேற்புரை வழங்கினார்.*

***சிறப்புரை:***

***டாக்டர்.S. இலக்கியா,தேசியகுழந்தைகள்நலதிட்டக்குழு, மருத்துவ அலுவலர் ,திருப்பூர் மாநகராட்சி*** *அவர்கள் பெண்கள் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் பற்றி உரையாற்றினார்.*

*பெண்கள் தங்கள் உடல்நலத்தை எவ்வாறு ஆரோக்கியமாக பேணிக்காப்பது என்பது குறித்தும், அன்றாடவாழ்வின் உணவு முறைகள், சுகாதார முறை தொடர்பான விழிப்புணர்வு போன்றவற்றை பற்றியும் மாணவிகளிடையே எடுத்துரைத்தார்.*

***டாக்டர்.ஆர். பூரணிஆஷா,சுண்டமேடு நகர்புறஆரம்ப சுகாதாரநிலையம், மருத்துவஅலுவலர், திருப்பூர் மாநகராட்சி*** *அவர்கள் நலவாழ்வு மற்றும் சுகாதாரம் குறித்து உரையாற்றினார். இரத்தசிவப்பணுக்களின்எண்ணிக்கை குறித்தும், இரத்த சோகை மற்றும் மகப்பேறுகாலத்தில் எவ்வாறு உடல் நலத்தை பாதுகாப்பது போன்றவழிகாட்டுதல் நெறிமுறைகளைபற்றி மாணவிகளிடையே உரையாற்றினார்.*

***முனைவர் வெ.பா. உஷா,உதவிப் பேராசிரியர், பொருளியல்துறை மற்றும்விளையாட்டுதுறைபொறுப்பாசியர்*** *அவர்கள் பெண்கள் பாதுகாப்பு, செல்லிடப்பேசியை எவ்வாறுகையாள வேண்டும்,காவலன் செயலியைபதி வேற்றுதல் மற்றும் உபயோகிக்கும்முறை, பெண்கள்பாதுகாப்பு உதவிமையஎண்களை தொடர்பு கொண்டு தங்களுடைய சிக்கல்களைத் தெரியப்படுத்தவும், இணைய வழியின்மூலம் நடைபெறும் குற்றச்செயல்கள்குறித்தும்,எவ்வாறு மாணவிகள் தங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிய வழி முறைகளையும் எடுத்துரைத்தார்.*

*புதிய மாணவியர்களுக்குதற்காப்பு கலைமற்றும் சிலம்பம் போன்ற கலைகளின் மூலம் மூத்தமாணவியர்கள் மகிழ்வித்தனர்.*

***நன்றியுரை:***

***முனைவர். கோ. சுபா இணைப்பேராசிரியர் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் துறைத்தலைவர்*** *அவர்கள் நன்றியுரையாற்றினார். இவ்விழா அமைப்பிற்கு உதவிய முதல்வர், சிறப்புவிருந்தினர், ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர்கள் மற்றும் அனைத்து முதலாமாண்டு மாணவிருக்கும் நன்றி தெரிவித்தார் பிறகு அறிமுகபயிற்சி இனிதே நிறைவு பெற்றது.*

வரவேற்புரை : முனைவர். அ.பா. ஸ்ரீதேவி இணைப்பேராசிரியர் மற்றும் மின்னணுவியல் துறைத்தலைவர்




சிறப்புசெய்தல் :திருமதி. ப.கௌரி, உதவிப்பேராசிரி யர்மற்றும் பொருளியல் துறைத்தலைவர்



சிறப்புரை:டாக்டர். S. இலக்கியா, தேசியகுழந்தைகள்நலதிட்டக்குழு,
மருத்துவஅலுவலர், திருப்பூர்மாநகராட்சி







சிறப்புரை: டாக்டர்.ஆர். பூரணிஆஷா ,சுண்டமேடு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம்,
மருத்துவ அலுவலர், திருப்பூர்








***நன்றியுரை: முனைவர். கோ. சுபா இணைப்பேராசிரியர் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்தியல் துறைத் தலைவர்***

**மாணவிகளின் தற்காப்பு கலை மற்றும் சிலம்பம்**









# DAY- 4

## எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக்கல்லூரி
## திருப்பூர் - 641 604

### அறிமுக பயிற்சி

நாள் : 03.07.2025 நேரம் : காலை 10.00 மணி

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : **முனைவர் T.பாலசரவணன் அவர்கள்**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
தாவரவியல் துறை

தலைமையுரை : **முனைவர் மா.தமிழ்மலர் அவர்கள்**
முதல்வர் (மு.கூ.பொ)
எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக்கல்லூரி
திருப்பூர்.

சிறப்புரை : **திரு.ந.ரஞ்சிதா தேவி அவர்கள்**
மாவட்ட சமூக நல அலுவலர்
திருப்பூர் மாவட்டம்.

தலைப்பு : சமூக நலன் மற்றும் உயர் கல்வி உதவிக்கான அரசு திட்டங்கள் பற்றிய கண்ணோட்டம்.

கல்வி உதவித்தொகை அணுகுமுறை : **முனைவர் T.பாலசரவணன் அவர்கள்**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
தாவரவியல் துறை

பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய உரை : **முனைவர் N.சத்யா அவர்கள்**
**முனைவர் S.விமலா தேவி அவர்கள்**
கௌரவ விரிவுரையாளர்கள் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டுத் துறை

குறை தீர்க்கும் வழிமுறை : **முனைவர் J.பிரபாகரன் அவர்கள்**
இணை பேராசிரியர், வணிக நிர்வாகவியல் துறை

நன்றியுரை : **முனைவர் ரா.உஷா தேவி அவர்கள்**
இணை பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டுத் துறை

நாட்டுப்பண்

***எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி-திருப்பூர்- 641 604***

***அறிமுக பயிற்சி - நான்காம் நாள் அறிக்கை***

***தாவரவியல் துறை, வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறை மற்றும் வணிக நிர்வாகவியல் துறை***

***நாள்: 03.07.2025*** ***நேரம்: காலை 10:00 மணி***

***வரவேற்புரை:***

*முனைவர் T.பாலசரவணன் உதவிபேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தாவரவியல் துறை அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.*

***சிறப்புரை:*** *செல்வி ந.ரஞ்சிதாதேவி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர், திருப்பூர்.*

*சிறப்பு விருந்தினர் தனது உரையில் கலை மற்றும் அறிவியல் இளங்கலை பாடம் பயின்ற மாணவியருக்கு தங்கள் துறையிலும் பொது துறைகளிலும் உள்ள வேலை வாய்ப்பு மற்றும் அதற்கான பயிற்சி முறைகளையும் விளக்கினார். மாணவியரின் பல்வேறு பட்ட சந்தேகங்களுக்கு விளக்கங்களையும் வழங்கினார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் இவ்விழாவில் பங்கேற்றனர்.*

***கல்வி உதவித்தொகையை அணுகும் முறை பற்றிய உரை****: முனைவர் T .பாலசரவணன் அவர்கள்.*

*அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவிகளுக்கு தமிழக அரசு மற்றும் மத்திய அரசு வழங்கும் பல்வேறு கல்வி ஊக்க தொகைகள் பற்றியும் அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க தேவையான தகுதிகள் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை எடுத்துரைத்தார்.*

***பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய உரை****: முனைவர் N.சத்யா அவர்கள் முனைவர் மற்றும் S. விமலா தேவி அவர்கள்.*

*பகடி வதை என்பது மூத்த மாணவர்கள் புதியவர்களை துன்புறுத்தும் ஒரு தவறான நடைமுறை என்றும் இது மாணவர்களின் மனநலத்தையும் கல்வியையும் பாதிக்கக்கூடியது. அதேபோல், பாலியல் துன்புறுத்தல் என்பது ஒரே வயதினர் தங்களுக்குள் குழுவாக ஒன்று சேர்ந்துப் பிறரை சிதைக்கும் செயல் என்பதையும் இவை இரண்டும் மாணவர்களின் பாதுகாப்பையும் மன உறுதியையும் குலைக்கும் செயல் என்பதையும் தமிழக அரசு மற்றும் கல்வி நிறுவனங்கள் இதனைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன எனவும் பகடி வதையும் துன்புறுத்தலும் ஒரு குற்றம் என்பதை உணர்ந்து, அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்படுவோம் என்பதை எடுத்துரைத்தார்.*


***குறை தீர்க்கும் வழிமுறை பற்றிய உரை:*** *முனைவர் J. பிரபாகரன் அவர்கள்.*

*எல்.ஆர்.ஜி.அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாணவிகள் தங்களது குறைகளையும் கருத்துகளையும் கல்லூரி நிர்வாகத்திடம் தெரிவிக்கும் பல்வேறு வழிமுறைகளையும் அதற்கான கல்லூரியில் செயல்படும் பல்வேறு அமைப்புகளையும் எடுத்துரைத்தார். கல்லூரியில் செயல்படும் பல்வேறு மாணவர் நலங்காக்கும் அமைப்புகளான மாணவிகள் குறைதீர்க்கும் மையம், புகார்பெட்டி, படிகவதை எதிர்ப்பு குழு, உள் புகார் குழு, போதை பொருள் தடுப்பு குழு, பாலியல் வன்கொடுமை எதிர்ப்பு குழு ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்தார்.*

***நன்றியுரை :*** *முனைவர் ரா. உஷா தேவி அவர்கள்.*

*இவ்விழாவின் நன்றியுரையில் இவ்விழா அமைப்பிற்கு உதவிய முதல்வர் , சிறப்பு விருந்தினர், ஒருங்கிணைப்பாளர்கள், பேராசிரியர்கள், தன்னார்வ மாணவியர்கள் மற்றும் அனைத்து முதலாம் ஆண்டு மாணவியர் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்தார்.*

***வரவேற்புரை :***
*முனைவர் T. பாலசரவணன் துணை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் தாவரவியல் துறை*




***சிறப்புரை :***
*செல்வி ந. ரஞ்சிதாதேவி அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர், திருப்பூர்.*





சிறப்பு விருந்தினர் சமூக நலன் மற்றும் உயர்கல்வி உதவிக்கான அரசு திட்டங்கள் பற்றிய கண்ணோட்டம் குறித்து மாணவிகளுடன் கலந்துரையாடல்






**கல்வி உதவித்தொகை அணுகும் முறை பற்றிய உரை:**

*முனைவர் T. பாலசரவணன் அவர்கள் தாவரவியல் துறைத்தலைவர்*



**குறை தீர்க்கும் வழிமுறை:**

*முனைவர் J. பிரபாகரன் அவர்கள், இணை பேராசிரியர், வணிக நிர்வாகவியல் துறை*





**பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய உரை:**

*முனைவர் N. சத்யா அவர்கள், வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டு துறை*




**பகடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய உரை:**

*முனைவர் S.விமலா தேவி அவர்கள், வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டு துறை*




***நன்றியுரை:*** *முனைவர் ரா. உஷா தேவி அவர்கள்,*
*இணை பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டு துறை.*



**மாணவியரின் சந்தேகங்களை தெளிவுபடுத்தும் அமர்வு**

பல்வேறு பட்டப்படிப்புகளின் வாய்ப்புகள் குறித்த சந்தேகங்களை தெளிவுபடுத்தும் அமர்வு



















# DAY-5

***எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரி-திருப்பூர்-641 604***

**முதலாமாண்டு மாணவியருக்கான ஐந்தாம் நாள் அறிமுகப் பயிற்சி**

*நாள்: 04/07/2025* *நேரம்: 10.00 மணி*

***வரவேற்புரை : முனைவர்.பா.நளினி***

*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,*
*வேதியியல் துறை*



***சிறப்புரை : திருமதி. ஸ்ரீ ராதா அவர்கள்*** வழக்கறிஞர் மற்றும் நோட்டரி பப்ளிக் ,திருப்பூர்




***கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குறித்த விவரங்கள் :***

***முனைவர். இரா. தேவி , உதவிப்பேராசிரியர்,கணித்துறை ,***

***(கல்லூரி வேலை வாய்ப்பு அலுவலர்)***



***முன்னாள் மாணவியர் உரை : முனைவர்.சு. அன்னபூரணி,*** உதவிப்பேராசிரியர், வேதியியல் துறை




***இணைப் பாடத்திட்டம் மற்றும் பாடத் திட்டத்துக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் : முனைவர்.சு. அன்னபூரணி,*** உதவிப்பேராசிரியர்,வேதியியல் துறை



***நன்றியுரை : முனைவர் அ.மனோன்மணி,***

*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், கணிதத்துறை*




முதலாம் ஆண்டு மாணவியருக்கான அறிமுக பயிற்சியின் ஐந்தாம் நாளான இன்று விழாவின் தொடக்க நிகழ்வாக வேதியியல் துறை தலைவர் முனைவர் பா.நளினி அவர்கள் வரவேற்புரை வழங்கினார் மேலும் சிறப்பு விருந்தினர் வழக்கறிஞர் ஸ்ரீ ராதா அவர்களை அவையோர் அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசிய வழக்கறிஞர் ஸ்ரீ ராதா அவர்கள் கனவு மெய்ப்பட வேண்டும் என்ற தலைப்பில் மாணவியரிடையே உரையாற்றினார். பெற்றோர் மற்றும் ஆசிரியருக்கு உரிய மரியாதை அளித்தல், கடமைகளை அறிந்து காலத்தோடு செய்தல், மற்றும் பெண்களுக்கு எதிரான


செயல்களுக்கான சட்ட ரீதியான உதவிகள் மற்றும் பிரச்சனைகளை எவ்வாறு எதிர்கொள்வது அவற்றை எவ்வாறு சரி செய்வது என்பது குறித்து விழிப்புணர்வு அளித்தார். கனவு மெய்ப்பட தொடர்ந்து எவ்வாறு தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விளக்கமாக மாணவியருக்கு எடுத்துரைத்தார்

பின்னர் பேசிய கல்லூரியின் வேலை வாய்ப்பு மைய பொறுப்பாசிரியர் கணிதத்துறை உதவி பேராசிரியர் முனைவர் தேவி அவர்கள் மாணவியர் போட்டி தேர்வுகளுக்கு எவ்வாறு தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்தும் சுய விவர குறிப்புகள் எவ்வாறு தயார் செய்வது என்பது குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் வேலைவாய்ப்புகள் குறித்த இணையதள முகவரிகள் குறித்தும் மாணவியருக்கு விளக்கமாக கூறினார்.

கல்லூரியின் முன்னாள் மாணவியும் தற்சமயம் வேதியியல் துறையில் உதவி பேராசிரியரும் ஆன பேராசிரியர் அன்னபூரணி அவர்கள் பேசும்போது கல்லூரியில் உள்ள பல்வேறு வசதிகள் குறித்தும் இணை பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் குறித்தும் மாணவியருக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். கல்லூரியின் முன்னாள் மாணவியர் தற்சமயம் வைக்கும் பல்வேறு பதவிகள் குறித்தும் அவர் மாணவர் இடையே பேசினார்.

இறுதியாக கல்லூரி கணிதத்துறை தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர் மனோன்மணி அவர்கள் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவுற்றது

# DAY-6


LRG Government Arts College for Women
Tirupur-641 604
Orientation Programme – Day 6
Chief Guest
Dr. R. Suganyadevi, MBBS, DPM
District Nodal Officer
District Mental Health Programme
Tirupur
Special Lecture on
'MENTAL HEALTH AND WELL BEING'
Date: 07.07.2025
Time:10.00am
Venue: Auditorium

**L.R.G.GOVERNMENT ARTS COLLEGE FOR WOMEN,**
**TIRUPUR-641 604**
**ORIENTATION PROGRAMME- DAY 6**

**DATE: 07.07.2025** **TIME: 10:00 AM**

| | | |
|---|---|---|
| **Invocation** | | |
| **Welcome Address** | : | **Dr. LittyKoria**<br>**Associate Professor & Head,**<br>**Department of Zoology** |
| **Presidential Address** | : | **Dr. Tamil Malar**<br>**Principal (In Charge)**<br>**LRG Government Arts College for Women**<br>**Tirupur** |
| **Keynote Speaker** | : | **Dr. R. Suganyadevi, MBBS, DPM**<br>**District Nodal Officer**<br>**District Mental Health Programme**<br>**Tirupur** |
| **Topic** | : | **'Mental Health and Well Being'** |
| **Club Activities** | | |
| **Fine Arts** | : | **Dr. A. K.LakkumiVenmal**<br>**Associate Professor & Head**<br>**Department of Microbiology** |
| **NSS** | : | **Dr. P. Sumathi,**<br>**Assistant Professor,**<br>**Department of Zoology** |
| **YRC** | : | **Mrs. S. Krishnaveni**<br>**Assistant Professor,**<br>**Department of Chemistry** |
| **Entrepreneurial cell** | : | **Mrs. M.Rubini**<br>**Assistant Professor,**<br>**Department of Botany** |
| **Science Forum& Eco Club** | : | **Dr. M. Jesikha**<br>**Guest Lecturer,**<br>**Department of Zoology** |
| **Vote of Thanks** | : | **Dr. Balaji Prasad. M**<br>**AssociateProfessor & Head i/c**<br>**Department of Computer Science** |
| **National Anthem** | | |

***Special Guest – Dr.R.SuganyaDevi,MBBS,DPM,District Nodal Officer,District Mental Health Programme-Tirupur- Delivered a speech on “mental health and well being”***




***Club Activities – Dr.A.K.Lakkumi Venmal, Associate Professor & Head , Department of Microbiology***



*YRC- MRS.S.KRISHNAVENI, ASSISTANT PROFESSOR, DEPARTMENT OF CHEMISTRY*









***VOTE OF THANKS BY DR.BALAJI PRASAD M, ASSOCIATE PROFESSOR & HEAD I/C, PG & RESEARCH DEPARTMENT OF COMPUTER SCIENCE***




***SPECIAL GUEST HONOURED***

